NUS National University of Singapore
Source: *Tamil Murasu*, p4
Date: 17 April 2022

# என்யுஎஸ் 'டீச் எஸ்ஜி' திட்டத்துக்கு $10 மில்லியன் நன்கொடை

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக் கழகத்தின் (என்யுஎஸ்) பல்கலைக் கழக கலாசார நிலையத்தில் 'டீச் எஸ்ஜி' எனும் சமுதாய மதியுரைஞர் திட்டம் நேற்று அதிகாரபூர்வமாகத் தொடங்கப்பட்டது. கல்வி அமைச்சர் சான் சுன் சிங் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இத்திட்டத்தின்கீழ் என்யுஎஸ் மாணவர்கள் 700 பேர், குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கற்பிக்கவும் மதியுரைஞராக இருக்கவும் சமுதாயப் பங்காளிகளுடன் இணைந்து செயல்படுவர்.

சொத்து முகவர் நிறுவனமான ஹோா பீ லேண்ட், இந்தத் திட்டத்திற்குப் பத்து மில்லியன் வெள்ளி நன்கொடையை நேற்று வழங்கியது. ஏறத்தாழ 1,240 மாணவர்கள் இதன்மூலம் பலனடைவர் என்று கூறப்பட்டது.

'டீச் எஸ்ஜி' திட்டத்தை சென்ற ஆண்டு ஜனவரியில் தேசியப் பல்கலை முன்னோட்டம் பார்த்தது. பல்கலைக்கழக மாணவத் தொண்டூழியர்கள் குறைந்தபட்சம் 12 வாரங்களுக்கு இதில் ஈடுபடுவர். ஒரு தொண்டூழியர் பள்ளி மாணவர்கள் இருவருக்கு வழிகாட்டியாக இருக்கலாம். அல்லது இருவர் சேர்ந்து மூன்று பேர் கொண்ட குழுவுக்கு வழிகாட்டலாம். இதற்காக 700 என்யுஎஸ் மாணவத் தொண்டூழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் 76 சமூகப் பங்காளிகள் கைகோத்துள்ளனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.